2013 அக்டோபர் 29]

தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 51, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

51—

நெல் சேமிப்புக் கிடங்கு

***29385**—**திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, தேவூரில் நெல் சேமிப்புக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி வட்டம், நாரப்பன்சாவடி என்ற இடத்தில் 1,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான கிடங்கு ஒன்று இயங்கி வருகிறது. மேலும், தற்போது தேவூருக்கு அருகில் சுமார் 13 கிலோ மீட்டர் தொலைவில் எடப்பாடி வட்டம், தங்கவூர் கிராமத்தில், 5,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு ஒன்று கட்டத் திட்டமிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. வருங்காலங்களில் தேவையின் அடிப்படையில் மேற்படி கிடங்கினைத் தேவூரின் பயன்பாட்டுக்கு உபயோகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.*

[2013 அக்டோபர் 29

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். என்னுடைய சங்கரி தொகுதி, சங்கரி வட்டம், தேவூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் பெரும்பாலும் நெல் பயிரிடப்படுகிறது. ஆண்டுக்கு சுமார் 25,000 மெட்ரிக் டன் நெல் உற்பத்தி செய்யப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கப்படுமென்று இங்கு கூறினார்கள். சங்கரி வட்டம், நாரப்பன்சாவடி என்ற இடத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான கிடங்கு ஒன்று இருப்பதாகவும், எடப்பாடி வட்டத்தில் ஒரு கிடங்கு கட்டப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்கள்.*

சங்கரி வட்டம், நாரப்பன்சாவடியில் இயங்கிவரும் கிடங்கு தேவூரிலிருந்து சுமார் 28 கிலோ மீட்டர் தொலைவிலும், எடப்பாடி வட்டம், எடப்பாடி பகுதியில் அமைந்துள்ள சேமிப்புக் கிடங்கு 13 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளன. மக்களுக்குக் கேட்டதையெல்லாம் செய்துகொடுக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேவூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள விவசாயப் பெருமக்களின் கோரிக்கையினை ஏற்று, அதனைப் பரிசீலித்து விரைவாக தேவூரில் நெல் சேமிப்புக் கிடங்கு அமைக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், சங்கரி தொகுதி, தேவூரில் நெல் சேமிப்புக் கிடங்கு ஒன்றினைக் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என மாண்புமிகு சங்கரி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள். சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அரசுக் கொள்முதல் நிலையங்களுக்கு விவசாயிகள் நெல்லை விற்பனை செய்யக் கொண்டுவருவதில்லை. மேலும், இம்மாவட்டத்தில் அரசு நவீன அரிசி ஆலைகளோ, அரைவை முகவர்களோ இல்லாது இருப்பதால், டெல்டா மாவட்டங்கள் போன்று வெளி மாவட்டங்களிலிருந்து நெல்லைக் கொண்டு வந்து*

2013 அக்டோபர் 29]

சேலம் மாவட்டத்தில் சேமித்து வைப்பதற்கான அவசியமும் ஏற்படுவதில்லை. இருந்தாலும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் திரும்பத் திரும்ப அந்தப் பகுதியிலே சேமிப்புக் கிடங்கு தேவையென்று கேட்பதனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற இந்த நேரம் ஏற்காடு சட்டமன்றத் தொகுதியில் இடைத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. இச்சூழ்நிலையில் தேர்தல் விதிமுறைகள் நடைமுறையில் இருப்பதனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பின்னர் ஆய்வு செய்யப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.*

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 52, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

52—

கறவைக் கூடம்

***3180**—**திரு. ஆ. நாராயணன்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, களக்காடு ஊராட்சி ஒன்றியம், கீழஉப்பூரணியில் பால் பண்ணை கறவைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?